தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று சில இடங்களில் மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு




**சென்னை,**

தமிழ்நாடு, மற்றும் புதுச்சேரியில் இன்று (திங்கட்கிழமை) ஆங்காங்கே சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், சேலம் மாவட்டம் ஆத்தூர், வாழப்பாடி ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழையும், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், குடியாத்தம் ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ. மழையும், தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது என வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

**திருச்சியில் 103 டிகிரி வெயில்**



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை (மே 11) 103 டிகிரி வெயில் பதிவானது. வரும் நாள்களில் வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. திருச்சியைத் தொடர்ந்து சென்னை, கரூர் பரமத்தி, மதுரை, சேலம், வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது. ஞாயிற்றுக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

திருச்சி - 103, வேலூர், கரூர் பரமத்தி - 102, மதுரை, சேலம் - 101, சென்னை - 100, தருமபுரி, பாளையங்கோட்டை - 99, கோவை - 95, கொடைக்கானல் – 67

**நீர்வழிச்சாலை திட்டத்தால் நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்கலாம்**

**மதுரை,**

நீர்வழிச் சாலைத் திட்டத்தால் நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாமின் ஆலோசகர் வெ.பொன்ராஜ் தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை அவர் கூறியது:

தமிழகத்தில் உள்ள அணைகளில் 243 டிஎம்சி தண்ணீர் மட்டுமே சேமித்து வைக்க முடியும். தண்ணீர் பற்றாக்குறை உள்ள தமிழகத்தில், ஆண்டுக்கு 177 டிஎம்சி தண்ணீர் வீணாகக் கடலுக்குச் செல்கிறது. இதைத் தவிர்க்கவும், அனைத்து

அணைகளிலும் தண்ணீர் இருப்பு குறையாமல் இருப்பதற்கும் நீர்வழிச்சாலை திட்டம் சரியானதாக இருக்கும்.

தமிழகத்தில் மட்டும் 900 கிமீக்கு நீர்வழிச் சாலையை ஏற்படுத்தி 5 கட்டங்களாக திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என பூர்வாங்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முதல்கட்டமாக மேட்டூரையும், வைகையையும் 350 கிமீ நீள நீர்வழியால் இணைக்கலாம்.

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 6 டிஎம்சி தண்ணீருக்காக போராடி வருகிறோம். அடுத்தடுத்து ஆறுகளை இணைத்து நீர்வழிச்சாலை ஏற்படுத்தினால், 200 டிஎம்சி முதல் 300 டிஎம்சி வரை தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும்.

தமிழகத்தில் நீர்வழிச் சாலைத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.50,000 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ரூ.10,000 கோடி என்ற அளவில் திட்டப் பணிகளைத் துவக்கலாம். மத்திய அரசிடம் இருந்து 75 சதவீதம், மாநில அரசின் பங்களிப்பு 25 சதவீதம் என திட்ட அனுமதி பெறலாம்.

மேலும், உலக வங்கியிடம் இருந்தும் நிதி பெறமுடியும். இத்திட்டத்தைச் செயல்படுத்தினால் மின் உற்பத்தி, போக்குவரத்து, சுற்றுலா மூலமாக நேரடி வருவாய் கிடைக்கும். தமிழகத்தில் 19 லட்சம் ஹெக்டேர் நெல் சாகுபடி நிலங்களில் 3 போகம் விளைவிக்க முடியும்.

ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழகம் ஆகிய தென்மாநிலங்களின் மொத்த நீர்கொள்திறன் 51 பில்லியன் கன மீட்டர். இம்மாநிலங்களில் அணைகளில் 16 பில்லியன் கன மீட்டர் மட்டுமே சேகரித்து வைக்கப்படுகிறது. ஆனால், கிருஷ்ணா மற்றும் கோதாவரி ஆறுகளில் இருந்து மட்டும் ஆண்டுக்கு 2,000 முதல் 3,000 டிஎம்சி தண்ணீர் கடலில் சென்று கலக்கிறது. தென்மாநிலங்களில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கை நீர்வழிச்சாலைத் திட்டம் வழியாக இணைத்து அனைத்து மாநிலங்களும் பயன்படுத்திக் கொள்ள முடியும். எதிர்கால தண்ணீர் மற்றும் உணவு உற்பத்திக்கான பாசன வசதி தேவையை இத் திட்டத்தால் பூர்த்தி செய்து கொள்ளலாம். நதிநீர் இணைப்புத் திட்டத்தில் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், நிதி உள்ளிட்ட பல்வேறு சவால்கள் இருந்து வருகின்றன. இச்சூழலில் நீர்வழிச் சாலை திட்டம் சரியானதாக இருக்கும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இதுவே உகந்ததாக அமையும் என்றார்.

## கால்நடை மருத்துவப் படிப்பு கலந்தாய்வு: இன்று முதல் விண்ணப்பம் விநியோகம்

**சென்னை,**

கால்நடை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு விண்ணப்ப விநியோகம் திங்கள்கிழமை (மே 12) முதல் தொடங்க உள்ளது. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஜூன் 2-ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

கால்நடை மருத்துவப் படிப்பு, உணவுத் தொழில்நுட்பம், கோழியின உற்பத்தித் தொழில்நுட்ப இளநிலை பட்டப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்வை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது. இந்த கல்வியாண்டுக்கான (2014-15) கலந்தாய்வு ஜூன் 4-ஆவது வாரத்தில் தொடங்கப்பட உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் மே 12-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை விநியோகிக்கப்பட உள்ளன.

சென்னை மாதவரத்திலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம், வேப்பேரியில் உள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி உள்பட தமிழகம் முழுவதும் 14 மையங்களில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

விண்ணப்பத்தை தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். www.tanuvas.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளத்தைப் பயன்படுத்தி ஆன்-லைன் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

**கட்டணம்**: ஆன்-லைன் மூலம் விண்ணப்பிக்க எஸ்.சி., எஸ்.சி.ஏ., எஸ்.டி. பிரிவினருக்கு கட்டணம் ரூ.250, இதர பிரிவினர் ரூ.500 செலுத்த வேண்டும். விற்பனை மையத்தில் விண்ணப்பங்களைப் பெற எஸ்.சி., எஸ்.சி.ஏ., எஸ்.டி.

பிரிவினர் ரூ.300 கட்டணமும், இதர பிரிவினர் ரூ.600 கட்டணமும் செலுத்த வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஜூன் 2-ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பித்தோரின் தரவரிசைப் பட்டியல் ஜூன் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படும். கலந்தாய்வு ஜூன் நான்காவது வாரத்தில் நடத்தப்படும். கலந்தாய்வு குறித்த பிற விவரங்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் ஜூன் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

## மீன்வளக் கல்லூரி இளநிலை படிப்பு: மே 14 முதல் விண்ணப்ப விநியோகம்

**சென்னை,**

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் அங்கமாக செயல்பட்டு வரும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் 4 ஆண்டு இளநிலை பட்டப் படிப்பில் (B.F.SC) சேருவதற்கான விண்ணப்பங்கள் மே 14 முதல் விநியோகிக்கப்படவுள்ளன. இது குறித்து தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் கு.ரத்னகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மீன்வள இளநிலை பட்டப்படிப்பில் முதலாமாண்டில் மொத்தம் 40 இடங்கள் உள்ளன. இதில் சேருவதற்கான விண்ணப்பங்கள் மே 14-ஆம் தேதி முதல் விநியோகிக்கப்படவுள்ளன. விண்ணப்பங்களை பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் (ce@tnfu.org.in) மட்டுமே பெற முடியும். இணையதளத்தில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து ஜூன் 10-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## மழை குறையும்: வெயில் அதிகரிக்கும்

**சென்னை,**

காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி வலுவிழந்த நிலையில் தமிழகத்தில் மழை குறைந்து வெயில் அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறினர். இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: கர்நாடக

மாநில நிலப்பகுதிக்குச் சென்ற காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்துள்ளது. இதனால் தமிழகத்தில் மழை குறையும். இனி வரும் நாள்களில் வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்று தெரிவித்தனர்.

திருச்சியில் 102 டிகிரி வெயில்: தமிழகத்தில் மழை குறைந்துள்ள நிலையில், வெயில் அதிகரித்துள்ளது. திருச்சி, வேலூர், கரூர் பரமத்தி ஆகிய இடங்களில் சனிக்கிழமை 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

சனிக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்): திருச்சி - 102, வேலூர் - 101, கரூர் பரமத்தி - 100, சென்னை, மதுரை, சேலம், தருமபுரி - 99, பாளையங்கோட்டை - 98, கோவை - 93, கொடைக்கானல் - 69

## வேளாண் கல்லூரியில் மகளிர் ஆடை தயாரித்தல் பயிற்சி

**மதுரை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், மகளிர் ஆடை தயாரித்தல் உள்ளிட்ட 3 வகையான பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

மே 16ஆம் தேதி முதல் 2 நாள்களுக்கு பேப்ரிக் பெயின்டிங் பயிற்சியும், மே 19 முதல் மே 24 வரை மகளிர் ஆடை தயாரித்தல் பயிற்சியும், மே 19 முதல் மே 30 வரை அடிப்படைத் தையல் பயிற்சியும் அளிக்கப்படும்.

பள்ளி மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், சுயதொழில் செய்ய விரும்புவோர், சுய உதவிக்குழுவில் விருப்பமுள்ள உறுப்பினர்கள், இப்பயிற்சியில் சேரலாம்.

பயிற்சி நாள்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை வகுப்புகள் நடைபெறும். இப்பயிற்சியில் சேர விரும்புவோர், பேராசிரியர் மற்றும் தலைவர், ஆடை வடிவமைப்பு மற்றும் அலங்கார தொழில்நுட்பத் துறை, மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-14 என்ற முகவரியில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

தொலை பேசி 0452-2424682, அலைபேசி 96774-71079 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டும் முன்பதிவு செய்து கொள்ளலாம், என அக் கல்லூரி புலமுதல்வர் ஜி. புஷ்பா தெரிவித்துள்ளார்.

## கோடை மழையால் மாம்பழங்களில் நீர்ச்சத்து கூடும்: விவசாயிகள் மகிழ்ச்சி

**நத்தம்,**

நத்தம் பகுதிகளில் பெய்த கோடை மழையால் மாம் பழங்களில் நீர்ச்சத்து கூடும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு போதிய இல்லை. இதனால் கடந்த 3 மாதங்களாக நத்தம் பகுதியில் கடும் வறட்சி நிலவியது. இதனால் மா மரங்கள் பாதிக்கப்பட்டன. மேலும் ஒருசில மரங்கள் நல்ல பருவத்தில் இருந்த போதும் பலன் தரும் நிலையில் காய்ந்து பட்டுப் போனது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்தனர். அவற்றைக் காப்பாற்ற ஆழ்துளை கிணறுகள் அமைத்தும் நீர் கிடைக்கவில்லை. இதனால் லாரிகளில் நீரை விலைக்கு வாங்கி மரங்களுக்கு பாய்ச்சி காப்பாற்றி வந்தனர்.

வறட்சி காரணமாக மாம் பிஞ்சுகள் போதிய நீர்ச்சத்து இன்றி காணப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் தொடர்ந்து பெய்த சாரல் மழையால் மரங்களில் நீர்ச்சத்து பெருக்கம் அடைய வாய்ப்புள்ளது. இதனால் நீர்ச்சத்து அதிகமாகி எடை அதிகரிக்கும்.

இதுகுறித்து மா விவசாயி சுப்பிரமணியன் கூறியதாவது: மழை இன்மையால் மா மரங்களில் போதிய பெருக்கம் இன்றியும் நீர்ச்சத்து இல்லாமலும் மாங்காய்கள் காணப்பட்டன. கடந்த வாரம் பெய்த சாரல் மழையால் நீர்ச்சத்து கூடியதுடன் எடையும் அதிகரித்துள்ளது. இவை சுமார் 250 கிராம் எடையில் காணப்பட்ட மாங்காய்கள் கணிசமாக 150 கிராம் வரை எடை கூடி 400 கிராம் வரை வர வாய்ப்புள்ளது. இது கவலையில் இருந்த விவசாயிகளுக்கு ஆறுதலாக உள்ளது. இருப்பினும் முற்றிலும் மரங்கள் வறட்சியிலிருந்து விடுபட தொடர்ந்து பலத்த மழை பெய்ய வேண்டும் என்றார்.

## கொடைக்கானலில் விவசாய பணிகள் தொடக்கம்

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் பெய்த மழையின் காரணமாக விவசாயப் பணிகளை தொடங்கியுள்ளனர். கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக பெய்த மழையின் காரணமாக நீர்வரத்து தொடங்கியுள்ளது. இதையடுத்து செண்பகனூர், பிரகாசபுரம்,ஐயர்கிணறு, வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, பள்ளங்கி,

கோம்பை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் உழவு செய்தல், உருளைக் கிழங்கு நடுதல், பீன்ஸ், கேரட், முள்ளங்கி விதை நடுதல், மற்று பழனி, மே 11: பழனி அருகே நெய்க்காரபட்டி கிரசென்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மேல்நிலைப் பொதுத்தேர்வில் நூறு சதம் தேர்ச்சி பெற்றுள்ளது.

பழனி அருகே நெய்க்காரபட்டியில் கிரசென்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. தற்போது வெளியான மேல்நிலைப் பள்ளி பொதுத் தேர்வில் இப்பள்ளி நூறு சதம் தேர்ச்சி பெற்றுள்ளது. தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர் அனைவருமே 60சதம் மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மாணவர் லோகேஸ்வரன் 1008 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், மாணவர் இன்ஜமாம் 961 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், மாணவி நித்யஸ்ரீ 935 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பள்ளித் தாளாளர் ராஜ்குமார், முதல்வர் சித்ரா ராஜ்குமார் மற்றும் ஆசிரியர்கள், அலுவலர்கள் பாராட்டினர்.

**<u>திருப்புவனத்தில் கனமழை</u>**

**திருப்புவனம்,**

திருப்புவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளிக்கிழமை மாலை கனமழை பெய்தது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த ஒரு வாரகாலமாக வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலையால் தென்மாவட்டங்களில் தொடர்ந்து ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்நிலையில் திருப்புவனம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலையிலிருந்தே மேகமூட்டத்துடன் கூடிய மிதமான வெயில் அடித்தது.

இதே நிலை வெள்ளிக்கிழமை மாலை 6 மணி வரை நீடித்தது. இதைத்தொடர்ந்து இரவு 7 மணியளவில் கருமேகங்கள் சூழ்ந்து திருப்புவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் கனமழை பெய்தது.

இதனால் இப்பகுதி விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் மகிழ்ச்சியடைந்தன

## மண்டபம் பகுதியில் கடலின் தன்மையை அறிய சென்ஸார் கருவி

**ராமேசுவரம்,**

மண்டபம் துறைமுகப் பகுதியில் மீனவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் மன்னார் வளைகுடா கடலின் அன்றாட தன்மைகள் குறித்து அறிய மண்டபம் தேசிய கடல்சார் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பாக சென்ஸார் கருவி பொருத்தப்பட்டுள்ளது.

மண்டபம், ராமேசுவரம், பாம்பன் பகுதியில் பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடா கடல்பகுதியில் மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். படிப்பறிவு இல்லாத மீனவர்களின் வாழ்வாதாரங்கள் வளர்ச்சியடைய மத்திய அரசு பல்வேறு பயிற்ச்சிகள் அளித்து கடலின் நிலவரங்களை அறிய வைத்து வருகிறது.

மேலும் பகல், இரவு என கடலில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் கடலில் புயலும், நீரின் மாற்றங்களும் எப்போது வரும் என தெரியாமல் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர்.

மீனவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேசிய கடல்சார் ஆராய்ச்சி நிலையம் மண்டபம் தெற்கு துறைமுகப்பகுதியில் கடலில் தன்மைகளையும்,காற்றின் வேகத்தையும்,கடலில் மாற்றத்தையும்,தட்பவெட்ப நிலைகளையும்,சுனாமி போன்ற புயல்களையும்,கடல் நீரின் மட்டத்தையும் ஆய்வு செய்து உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் சோலார் மின் இணைப்போடு இயங்கும் வகையில் சென்ஸார் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இந்த கருவி உடனுக்குடன் கடலின் தன்மை குறித்து சென்னை தேசிய கடல்சார் ஆராய்ச்சிநிலையத்தில் உள்ள கணினியில் பதிந்து கொள்ளும்.

மேலும் இந்த வசதி மூலம் மீனவர்களுக்கு அன்றாட கடலின் நிலைமை குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து ஒரு சில மாதத்தில் பாக்ஜலசந்தி கடல் பகுதியிலும் இந்த கருவி பொருத்துவதற்கு தேசிய கடல்சார் ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## குண்டாறில் வெள்ளம்: கண்மாய்கள், ஊருணிகளில் தண்ணீர் நிரம்புகிறது

**கமுதி,**

கமுதி குண்டாறில் வெள்ளம் பெருகி ஓடுவதால் சிறிய கண்மாய்கள் மற்றும் ஊருணிகளில் தண்ணீர் நிரம்பி வருகிறது.

மதுரை மாவட்டத்தில் குண்டாறு தொடங்கி, விருதுநகர் மாவட்டம் வழியாக ஓடி வந்து ராமநாதபுரம் மாவட்டம் கமுதியை அடைகிறது. கமுதியில் குண்டாறின் குறுக்கே பெரிய மதகு அணை (ஷட்டர்) கட்டி, வெள்ள நீர் தடுக்கப்படுகிறது. ஆற்றின் ஒரு புறம் உள்ள மதகு கதவுகள் மூலம் வெளியேற்றப்படும் தண்ணீர், மலட்டாறு வழியாகவும், மற்றொரு புறம் ரெகுநாதகாவிரியிலும் தண்ணீர் வெளியேறும். இந்த தண்ணீர் கமுதி, முதுகுளத்தூர், கடலாடி தாலுகாக்களிலுள்ள பெரிய, சிறிய கண்மாய்களுக்கு சென்றடையும்.

தற்போது விருதுநகர், மதுரை மாவட்டங்களில் பெய்த பலத்த கோடை மழை காரணமாக குண்டாறில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. இந்த தண்ணீர் கமுதியில் செட்டி ஊருணி, கண்ணார்பட்டி ஊருணி, பாகிஸ்தான் ஊருணி, சுந்தரபுரம் ஊருணி, வண்ணார் ஊருணி, புலவன்கூட்டம் ஊருணி ஆகிவற்றில் பெருகி உள்ளது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் அதிகரித்துள்ளது. கடந்த 8 ஆண்டுகளுக்குப் பின்பு தற்போதுதான் பலத்த கோடை மழை பெய்துள்ளது.

## கோடை உழவுக்கு ஏற்ற மழை: வேளாண்மை இணை இயக்குநர்

**ராமநாதபுரம்,**

ராமநாதபுரம் மாவட்டத்தில் கோடை உழவுக்கு ஏற்ற வகையில் போதுமான மழை பெய்திருக்கிறது என வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியது:

பொதுவாக மே மாதம் கோடை காலமாக இருப்பதால் பெரும்பாலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையின் அளவு சராசரியாக 40 மி.மீட்டர் மட்டுமே இருக்கும். ஆனால் இந்த ஆண்டு மே மாதத்தில் இதுவரை இல்லாத வகையில் சராசரியாக 155 மி.மீ.மழை பெய்திருக்கிறது. கடந்த 2011-இல் இதே மே மாதம் 11 மி.மீ, 2012-

இல் 7 மி.மீ. 2013-இல் 11 மி.மீட்டர் மழை மட்டுமே பெய்திருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த ஆண்டில் மே மாதத்தில் 7 மற்றும் 8 ஆகிய இரு தேதிகளில் மட்டும் மிக அதிகமான மழை பெய்திருப்பதாக பதிவாகியுள்ளது. இதில் ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியில் தான் சராசரியாக 367 மி.மீ.மழை மே மாதம் பெய்துள்ளது. மிகக்குறைவான மழையாக ராமேசுவரத்தில் 73.8 மி.மீட்டரும், முதுகுளத்தூரில் 74.8 மி.மீட்டரும் மழை பதிவாகியிருக்கிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு மே மாதம் முதல் தேதி 6.5மி.மீ, 2 ஆம் தேதி மழை பதிவாகவில்லை.

3ஆம் தேதி 4.88, நான்காம் தேதி 8.04, ஐந்தாம் தேதி 12.69ம், 6ஆம் தேதி 14.28 ம், ஏழாம் தேதி 52.72ம், 8ஆம் தேதி 61.44 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது. மே மாதத்தில் மட்டும் மே மாதம் கடந்த 8 நாள்களில் ராமநாதபுரம் மாவட்டத்தில் 155.68 மி.மீ.சராசரியாக மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கோடை மழையானது கோடை உழவுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும்.

கோடை உழவு செய்வதால் மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கும். மண்ணுக்குள் இருக்கும் பூச்சிகள் வெளியில் வந்து இறந்து விடும்.

மண்ணில் நீர்ப்பிடிப்புத் தன்மை அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும், மண்ணில் நிலவும் காற்றோட்டத்தால் வேரின் வளர்ச்சி அதிகரித்து மகசூலும் அதிகமாக கிடைக்கும். கோடை உழவுக்கு ஏற்றதாக இருந்தாலும் இந்த மழை பருத்தி விவசாயிகளுக்கும் சாதகமாக இருக்கிறது.

இதே மழை மேலும் தொடர்ந்து பெய்தால் பருத்தி விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும். பருத்தி விவசாயிகளுக்கு மட்டும் இப்போது பெய்துள்ள மழை போதுமானதாகும். ஏனெனில் பருத்தி பயிரிட்டுள்ள 1900 ஹெக்டேரும் அறுவடை நிலையில் இருக்கிறது.

தொடர்மழையாக நீடித்தால் பருத்தி பயிரிட்டுள்ள அனைத்து விவசாயிகளுமே பாதிக்கப்படும் வகையில் பருத்திப்பஞ்சு நனைந்து வீணாகிவிடும். அதே நேரத்தில் பருத்தியைத் தாக்கக்கூடிய மாவுப்பூச்சித் தாக்குதலும் கோடைமழையால் குறைந்து விடும்.

கோடை மழையால் பயறு, சிறு தானியங்கள் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு இந்த மழை போதுமானதாக இல்லை.

ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் 1500 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தையும் மழை நீர் வழிந்தோடி பண்ணைக் குட்டைக்கு வரும் வகையில் செய்திருந்தால் அந்தந்த பகுதிகளில் நீர் ஆதாரம் பெருகும். மீன்களும் நல்ல வளர்ச்சியடையும். இந்த ஆண்டு மே மாதத்தில் மட்டும் அதிக மழை பெய்துள்ளது. ஆனால் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் மழையே பெய்யவில்லை என்றும் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

பேட்டியின் போது வேளாண்மை உதவி இயக்குநர் அமர்லாலும் உடன் இருந்தார்.

## கோவையில் திடீர் மழை

**கோவை,**

கோவையில் ஞாயிற்றுக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. இதனால் கோடை வெயில் தாக்கம் குறைந்து இதமான தட்பவெப்ப நிலை நீடிக்கிறது.

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில், கோவை மாவட்டத்திலும் கடந்த 2 தினங்களுக்கு முன்பு நல்ல மழை பெய்தது.

இதனிடையே காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்ததால், மழையும் குறைந்தது. இதனிடையே சனிக்கிழமை மழை குறைந்து வெயில் சுட்டெரித்தது.

ஞாயிற்றுக்கிழமை மதியம் வரை வெயில் அடித்தது. திடீரென மாலையில் நகரின் பல இடங்களில் மழை பெய்தது.

## உதகையில் நிறைவடைந்தது 2 நாள் ரோஜா கண்காட்சி

**உதகை,**

உதகையில் நடைபெற்ற 2 நாள் ரோஜா கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 30,000க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இக் கண்காட்சியை கண்டுகளித்தனர். உதகையில் கோடை

சீசனையொட்டி தோட்டக்கலைத் துறையின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் 2 நாள் ரோஜா மலர்க் காட்சி, சனிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது.

இக்கண்காட்சியில் நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறையின் சார்பில் ரோஜா மலர்களாலான வீணை அமைக்கப்பட்டிருந்தது. கோவை, கிருஷ்ணகிரி, சேலம், மதுரை, கொடைக்கானல், தருமபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறை அமைப்புகளின் சார்பில் பலவேறு காட்சி உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. போட்டியாளர்களின் சார்பில் பல்வேறு காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் கோவை மாவட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மலர் கங்காருவுக்கு முதல் பரிசும், தருமபுரி மாவட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மலர் பான்டா கரடிக்கு இரண்டாம் பரிசும், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த ரோஜா பாராசூட்டுக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

இதையடுத்து பெஸ்ட் புளூம் ஆப் தி ஷோ டிராபி, சாண்டிநள்ளா ஸ்டெர்லிங் பயோடெக் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

கண்காட்சியின் சுழற்கோப்பைகள் எம்.ஏ.கான், கோழிப்பண்ணை பயாலஜிக்கல் மையம், ஸ்டெர்லிங் பயோடெக், பிருந்தாவன் பப்ளிக் பள்ளி, அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை, திலீப்குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. ஷோ டே போட்டிகளுக்கான பிரிவில் 3 பரிசுகள் ஸ்டெர்லிங் பயோடெக் நிறுவனத்திற்கும், 3 பரிசுகள் குன்னூர் புனித ஜோசப் மேனிலைப் பள்ளிக்கும் வழங்கப்பட்டன.

பூங்காவிற்கான போட்டிகளில் உதகைக்கான பிரிவில் எல்சம்மா தாமஸ், எம்.ஏ.கான், ஸ்டெர்லிங் பயோடெக், கோழிப்பண்ணை பயாலஜிக்கல் மையம், ஜெம் பார்க் வீரமணி, சாகர் ரிசார்ட்ஸ், குந்தா மின் நிலையம் ஆகியவற்றுக்கும், குன்னூர் மற்றும் கோத்தகிரிக்கான பிரிவில் அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை, புனித ஜோசப் மேனிலைப் பள்ளி, பிருந்தாவன் பப்ளிக் பள்ளி ஆகியவற்றுக்கும் வழங்கப்பட்டன.

ஷோ டே பிரிவில் 8 முதல் பரிசுகளும், 6 இரண்டாம் பரிசுகளுமாக 14 பரிசுகள் ஸ்டெர்லிங் பயோடெக் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன. புனித ஜோசப்

மேனிலைப் பள்ளிக்கு 4 முதல் பரிசுகளும், வெலிங்டன் பாளைய வாரியம் மற்றும் லார்சன் டூப்ரோ நிறுவனத்ததிற்கு தலா 2 பரிசுகளும் வழங்கப்பட்டன.

## இயற்கை விவசாய மாதிரிப் பண்ணைகள்

**நாமக்கல்,**

இயற்கை விவசாயத்தை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்த, நாமக்கல் மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் இயற்கை விவசாய மாதிரிப் பண்ணைகள் அமைக்க நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நாமக்கல் மாவட்ட மரம், மூலிகை வளர்ப்போம் சங்கமும், ஒரு பருவ இதழும் இணைந்து "ஜெயிக்க வைத்த ஜீரோ பட்ஜெட் விவசாயம்" என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தை நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை நடத்தியன.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் வி.சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். ஆர்.குமரேசன் அறிமுக உரையாற்றினார். கூட்டத்தில் இயற்கை விவசாயத்தின் மூலம் சாதனை படைத்த விவசாயிகளான ஆலங்குடி பெருமாள், திருசெங்கோடு நடேசன், மருதமுத்து, பாலகிருஷ்ணன் ஆகியோர் தங்கள் அனுபவங்களை எடுத்துக் கூறினர்.

இந்தக் கூட்டம் குறித்து சங்கச் செயலர் தில்லைசிவக்குமார் கூறியது: தற்போதைய சூழலில் விவசாயம் வருவாய் ஈட்டக் கூடியதாகவும், லாபம் தரக்கூடியதாகவும் இல்லை. இதற்கு உரம், பூச்சிக் கொல்லிகள் உள்ளிட்ட இடுபொருள்களின் விலையேற்றமும், ஆள்கள் பற்றாக்குறையும் மிக முக்கியக் காரணமாகும். விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்காத நிலையில் அதிகரித்து வரும் உற்பத்திச் செலவுகளால் விவசாயிகளே விவசாயத்தைக் கைவிட்டுக் கொண்டுள்ளனர்.

தவிர, ரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துதால் உணவே நஞ்சாக மாறி மனிதர்களின் உடலும், மண்ணும் பாதிக்கப்பட்டுக் கொண்டுள்ளது. இத்தகைய நிலைக்கு இயற்கை விவசாயமே மாற்று வழியாகும். இது வெளிநாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது அல்ல. நமது முன்னோர்கள் கண்டுபிடித்து

பின்பற்றி வந்த பாரம்பரிய விவசாய முறையே ஆகும். கால்நடைகளின் சிறுநீர், சாணம் ஆகிவற்றை கொண்டு பஞ்சகவ்யம், ஜீவகாருண்யம், பூச்சி விரட்டி, மண்புழு உரம் தயாரித்து பயன்படுத்துதல் மற்றும் விளை நிலங்களில் நுண்ணுயிர்களை பெருக்குதல் என்பதே இதன் நோக்கமாகும். இந்த இயற்கை விவசாயத்தின் மூலம் இடுபொருள்களின் செலவினங்கள் குறைந்து வருவாயைப் பெருக்க முடியும்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகளும் இயற்கை விவசாயத்துக்கு மாற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. தவிர, நபார்டு வங்கியாளர்களும் பங்கேற்று இயற்கை விவசாயத்துக்குத் தேவையான இடுபொருள்கள் தயாரிக்க அளிக்கப்படும் மானியம், நிதியுதவித் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். தற்போது மாவட்ட மரம், மூலிகை வளர்ப்போம் சங்கத்தில் 150 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்து வட்டார அளவில் இயற்கை விவசாய மாதிரிப் பண்ணைகள் அமைத்து மற்ற விவசாயிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது என்றார் அவர்.

நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் பூவராகவன், இயற்கை விவசாயி புவணள், எஸ்.எஸ்.ஆர்.முரளிதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சங்கச் செயலர் தில்லை சிவக்குமார் வரவேற்றார்.

## அனைத்து தொடக்க வேளாண்மை சங்கங்களிலும் விரைவில் இ-சேவை மையம்

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து வட்ட அலுவலகங்களிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் அரசுப் பொது இ-சேவை மையங்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

மாவட்டத்தில் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் சான்றுகள், அரசு திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக மின்னணு முறையில் பதிவு செய்யப்படுகின்றன. பின்னர், அப்படிவங்கள் தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதன்மூலம் மக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும்

சான்றுகள் கிடைப்பதற்கு ஏதுவாக அரசுப் பொது இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன.

இந்த மையங்களில் வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, ஜாதிச் சான்று, ஆதரவற்ற விதவைச் சான்று, முதல் பட்டதாரிக்கான சான்று ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்து சான்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அரசுப் பொது இ-சேவை மையம் மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர், திருவையாறு, பாபநாசம் ஆகிய பகுதிகளில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகங்களில் உள்ளன.

மேலும், தஞ்சாவூர் வட்டாரத்தில் உள்ள மாத்தூர், மருங்கை, வல்லம், வண்ணாரப்பேட்டை, சூரக்கோட்டை, திருக்கானூர்பட்டி, திருவையாறு வட்டாரத்தில் உள்ள மணக்கரம்பை, திருவையாறு, வைத்தியநாதன்பேட்டை, கண்டியூர், பூதலூர், ஒன்பத்துவேலி, கீழத்திருப்பூந்துருத்தி, மேலத்திருப்பூந்துருத்தி, வெள்ளாம்பெரம்பூர், நடுக்காவேரி, கருப்பூர், வரகூர், வேங்கடசமுத்திரம், வானராங்குடி, பூதராயநல்லூர், கோவிலடி, ஆற்காடு, அலமேலுபுரம், ராயமுண்டான்பட்டி, ராஜகிரி, நேமம், புதுக்குடி, பழமாநேரி, மேகளத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் அரசுப் பொது இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன.

எனவே, பொதுமக்கள் தேவைப்படும் சான்றுகளுக்கான விண்ணப்பத்தை எந்தச் சேவை மையத்திலும் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால், எந்தப் பொது சேவை மையத்தில் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதோ, அந்தச் சேவை மையத்தில் மட்டுமே சான்று வழங்கப்படும்.

விண்ணப்பத்தில் தங்களுடைய கைப்பேசி எண்ணை தவறாமல் குறிப்பிட வேண்டும். இந்தக் கைப்பேசிக்கு வரும் தகவலை தெரிந்து, அதனடிப்படையில் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட அரசுப் பொது இ-சேவை மையத்துக்குச் சென்று சான்றைப் பெற்றுக் கொள்ளலாம். அனைத்து வட்ட அலுவலகம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் அரசுப் பொது இ-சேவை மையங்கள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

எனவே, பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கோ அல்லது வட்ட அலுவலகத்துக்கோ சென்றுதான் சேவை மையத்தில் விண்ணப்பிக்க வேண்டும்

என்ற அவசியமில்லை. தங்களுடைய வசிப்பிடத்துக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்தைப் பயன்படுத்திக் கொண்டு விரைவில் பயனடையலாம்.

## பலாப்பழ உணவுப் பொருள்கள் தயாரிப்பு பயிற்சி: மே 15-ல் நடைபெறுகிறது

**நீடாமங்கலம்,**

""நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வரும் 15-ம் தேதி பலாப்பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல் குறித்த செயல்விளக்க ஒருநாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

இதில் திருவாரூர் மாவட்ட விவசாயிகள், சுயஉதவிக் குழுவினர் மற்றும் அரசு சாரா நிறுவன உறுப்பினர்கள் பங்கேற்கலாம்.

பங்கேற்க விரும்புவோர் தங்கள் பெயரை நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04367-260666, 04367-261444 என்ற எண்ணிலோ முன்பதிவு செய்து கொள்ளலாம்" என வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் க. சோழன் வெளிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ஆடிப் பட்ட உழவுப்பணியில் விவசாயிகள்!

**கடலூர்,**

கடலூர் மாவட்டத்தில், 4 நாள்களாக பெய்த கன மழை காரணமாக ஆடி பட்டத்திற்கு உழவுப் பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்களைத் தவிர பிற பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக பருவ மழை பொய்த்து போனது. இதனால் குளங்கள் வறண்டு விட்டன.

மாவட்டத்தின் பல்வேறுப் பகுதிகளில் நிலத்தடிநீர் மட்டம் 700 அடிக்கும் கீழே சென்று விட்டது. பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாட்டை சந்திக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். விவசாயப் பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

ஆடு, மாடுகளுக்கு கூட தீவனம் இல்லாமல் கால்நடைகளை வந்த விலைக்கு விற்கும் பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இந்நிலையில் கடந்த 5 ஆம் தேதி தொடங்கி 7 ஆம் தேதி வரை கடலூர் மாவட்டத்தின் பல்வேறுப் பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது. பல இடங்களில் 1 செ.மீ முதல் 3 செ.மீ. வரை மழை பெய்துள்ளது. காய்ந்து கிடந்த தரிசு நிலங்கள் மழை நீரால் குளிர்ச்சியடைந்துள்ளன.

இப்போது தான் ஆங்காங்கே மழைநீர் தேங்க ஆரம்பித்துள்ளது. இனி நிலத்தடிநீர் மட்டம் ஓரளவிற்கு உயரும் என நம்பிக்கை விவசாயிகளுக்கு பிறந்துள்ளது.

மழை நீரால் பூமி முற்றிலும் குளிர்ந்து போனது. இரவில் குளிர் காற்று வீசுவதால் புழுக்கம் குறைந்துள்ளது.

மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விவசாயிகள் ஆடிப் பட்டத்திற்கான உழவுப் பணிகளை தொடங்கி விட்டனர்.

ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் குருத்து காய்ந்து போய் கீழே விழும் நிலையில் இருந்தது. மழை பெய்ததால் தென்னை மரங்கள் பிழைத்துக்கொண்டன. 10 நாள் இடைவெளியில் இன்னும் 2 நாள்கள் இதுபோல் மழை பெய்தால் இந்த ஆண்டில் விவசாய பணிகளுக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கோ.மாதவன் கூறியது, இந்த மழையால் தரிசாய் கிடந்த நிலங்கள் குளிர்ந்துள்ளன. இந்த சூழ்நிலையை வீணாக்காமல் ஆடிப் பட்டத்திற்கான உழவுப் பணிகளை விவசாயிகள் தொடங்கி உள்ளனர்.

இப்போது உழுது எரு போட்டால் தான் அது மட்கும். ஆடி மாதத்தின் முதல் வாரத்தில் மீண்டும் உழுது விதை போட்டால் போதும்.

ஒன்றிரண்டு மழை விட்டு, விட்டு பெய்தால் கூட விதைகள் நன்கு முளைத்து பலன் கொடுக்கும்.

மானாவாரி பயிரான நிலக்கடலை, கம்பு, சோளம், மக்காச்சோளம், மொச்சை, தட்டைப்பயிறு போன்றவை பயிரிட விவசாயிகள் தயாராகி வருகின்றனர் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொழும்பில் இன்று இரண்டாம் கட்ட சமரச பேச்சு : சுமுகமாக முடியும் என தமிழக மீனவர்கள் நம்பிக்கை

**சென்னை** : தமிழக - இலங்கை மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், இலங்கை தலைநகர் கொழும்பில், இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இன்று நடக்கிறது. "சமரச பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்' என, தமிழக மீனவர்கள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர். தமிழக மீனவர்களை, எல்லை தாண்டி வந்ததாக இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவதும், மீனவர்கள் சிறைபிடிப்பு, படகுகள் பறிமுதல் செய்யும் நிகழ்வுகளும் தொடர்ந்து வருகின்றன.

தீர்மானம் நிறைவேற்றம் : தமிழக - இலங்கை மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், இரு நாட்டு மீனவ பிரதிநிதிகள் பங்கேற்ற முதற்கட்ட பேச்சு வார்த்தை, சென்னையில், ஜன., 27ல் நடந்தது.

சிறைபிடித்த மீனவர்களை உடனடியாக விடுவிப்பது; தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் பயன்பாடு கூடாது; எல்லை தாண்டி மீன் பிடிப்பதில்லை என, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை, மார்ச் 13ல், கொழும்பில் நடக்க இருந்தது. உடன்படிக்கையை மீறி, இலங்கை அரசு கைது செய்த தமிழக மீனவர்களை ஒட்டு மொத்தமாக விடுவித்தால் தான் பேச்சு என, தமிழக அரசு அறிவித்ததால் பேச்சுவார்த்தை ரத்தானது. சிறைபிடித்த மீனவர்களை இலங்கை விடுவித்ததால், இரண்டாம் கட்ட பேச்சுக்கு தமிழக அரசு சம்மதித்தது. இதையடுத்து, தமிழக - இலங்கை மீனவர்கள் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை, இலங்கை தலைநகர் கொழும்பில் இன்றும், நாளையும் நடக்கிறது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், சென்னையில் இரண்டு நாட்கள் நடந்தது. பின்னர், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இருந்து, 17 மீனவ பிரதிநிதிகளும், மத்திய அரசு, தமிழக, புதுச்சேரி அரசு அதிகாரிகள், ஒன்பது பேர் என, மொத்தம், 26 பேர் நேற்றிரவு, டில்லி புறப்பட்டனர்.

மனம் திறந்த பேச்சு : பேச்சுவார்த்தையில் பங்கேற்கும், தேசிய மீனவர் பேரவைத் தலைவர் இளங்கோ கூறுகையில், ""முதற்கட்ட பேச்சுவார்த்தை சுமுகமாக

முடிந்தது. அதில் எடுத்த முடிவுகளின் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நடக்கும். இரு தரப்பு மீனவர்களும் நேரடியாக மனம் திறந்து பேசுவதால், நிச்சயம் நல்ல தீர்வு கிடைக்கும்," என்றார்.

## எகிறியது வெப்பம் : ஒரே நாளில் 3 டிகிரி உயர்ந்தது

சென்னை : தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்ததால் குறைந்திருந்த வெப்பம், நேற்று திடீரென எகிறியது. சென்னை, திருச்சி, வேலூர், திருத்தணி பகுதிகளில் மீண்டும் அனல் காற்று வீசத் துவங்கியுள்ளது.

வங்கக்கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு பகுதியால், இரண்டு வாரங்களாக, தமிழகத்தில் ஆங்காங்கே கனமழை பெய்தது. காற்றழுத்த தாழ்வு பகுதி, கர்நாடகாவை நோக்கி சென்றதால், மழையின் அளவு கடந்த இரு தினங்களாக குறைந்தது. சென்னையில், வானம் மேக மூட்டமாகவும், வெப்ப நிலை, 34 டிகிரி செல்சியசாகவும் பதிவாகியது. இதனால், அனல் காற்றின் தாக்கமும் குறைந்தது. மழை குறைந்த நிலையில், நேற்று முன்தினம் இருந்த வெப்பத்தின் அளவை காட்டிலும், நேற்று காலை நிலவரப்படி, வெப்பநிலை, 3 டிகிரி செல்சியஸ் அளவிற்கு அதிகரித்திருந்தது.

இதனால், சென்னை, வேலூர், திருத்தணி, திருச்சி உள்ளிட்ட பகுதிகளில், மீண்டும் அனல் காற்றின் தாக்கம் அதிகரித்துள்ளது. சென்னையில், வானம் பாதியளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிக பட்சம், 38 குறைந்தபட்சம், 28 டிகிரி செல்சியசாக வெப்பநிலை பதிவாகும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## அதிகம் ! : 10 ஆண்டிற்கு பிறகு மே மாதத்தில் மழை...: கத்திரி வெயிலின் தாக்கம் குறைந்தது

**கடலூர்**: கடலூர் மாவட்டத்தில் 10 ஆண்டிற்கு பிறகு கோடை காலமான மே மாதத்தில் சராசரி அளவைவிட கூடுதலாக மழை பெய்துள்ளது. கடலூர் மாவட்டதின் 10 ஆண்டு சராசரி மழை அளவு (கடந்த 2003ம் ஆண்டுவரை ) 1,309 மி.மீ., ஆக இருந்தது.

அதன்பிறகு கடந்த 2004ம் ஆண்டு முதல் கடந்தாண்டுவரையிலான 10 ஆண்டின் கணக்கீட்டின்படி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 1,422 மி.மீ., ஆக உயர்ந்துள்ளது. அதன்படி குளிர் காலமான ஜனவரி மற்றும் பிப்ரவரியில் 27.7 மி.மீ, கோடை காலமான மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 153.7 மி.மீ., தென்மேற்கு பருவ மழைகாலமான ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 356.8 மி.மீ., வடகிழக்கு பருவமழை காலமான அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 883.9 மி.மீ., மழை பெய்ய வேண்டும்.

அதன்படி கடந்த இரண்டு ஆண்டாக மாவட்டத்தில் போதிய அளவில் மழை பெய்யாத நிலையில் வறட்சி நிலவி வந்தது. இந்தாண்டு, துவக்கமான குளிர் காலமான ஜனவரி மற்றம் பிப்ரவரி மாதங்களில் 12,21 மி.மீ., அளவே மழை பெய்தது. அதன்பிறகு கோடை காலமான மார்ச், ஏப்ரல் மாதங்களில் மழை பெய்யாத நிலையில் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்தது.

கடந்த 4ம் தேதி கத்திரி வெயில் துவங்கிய நிலையில், வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலைக்காரணமாக கடந்த 4ம் தேதி முதல் 8ம் தேதிவரை ஐந்து நாட்களில் மாவட்டத்தில் சராசரியாக 131.16 மி.மீ., மழை பெய்துள்ளது.

இந்தாண்டு மே மாதத்தில் மாவட்டத்தில் பெய்த மழை அளவு மி.மீ., வருமாறு:

சிதம்பரம் 266, லால்பேட்டை 232, காட்டுமன்னார்கோவில் 219, கொத்த வாச்சேரி 177, அண்ணாமலைநகர் 171.40, சேத்தியாத்தோப்பு 171.40, புவனகிரி 160, கடலூர் 146.70, ஸ்ரீமுஷ்ணம் 135, விருத்தாசலம் 134.40, பரங்கிப்பேட்டை 133, குப்பநத்தம்120, பெலாந்துறை 109, மே.மாத்தூர் 107, வானமாதேவி 100.20, வேப்பூர் 90, கீழ்செருவாய் 88, தொழுதூர் 74, காட்டுமயிலூர் 58, பண்ருட்டி34.90, லக்கூர் 27.40.

கடந்த 2004ம் ஆண்டில் கடும் கோடைகாலமான மே மாதத்தில் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்வது போன்று 413 மி.மீ., மழை கொட்டியது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் கோடை காலத்தில் சராசரி அளவை விட குறைவாகவே மழை பெய்து வந்த நிலையில் இந்தாண்டு மே மாதத்தில் பெய்ய வேண்டிய சராசரி அளவு மழைவிட கூடுதலாக மாத துவக்கத்திலேயே பெய்துள்ளது.

இதனால், மாவட்டத்தில் கத்திரி வெயிலின் தாக்கம் சற்று குறைந்துள்ளது.

-----------------------------------------------------

மாதம் 10 ஆண்டின் சராசரி இந்தாண்டு பெய்த

மழை அளவு மி.மீ மழை அளவு மி.மீ

-----------------------------------------------------

ஜனவரி 18.80 1.21

பிப்ரவரி 8.90 11.00

மார்ச் 41.50 00.00

ஏப்ரல் 33.30 00.00

மே (9) 78.90 131.16

-----------------------------------------------------

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.70 லட்சம் வர்த்தகம்

**ஆத்தூர்**: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1,200 மூட்டை மஞ்சள், 70 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, நைனார்பாளையம், சின்னசேலம், பெரம்பலூர் ஆகிய வெளிமாவட்டம் மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 500 விவசாயிகள், தங்கள் விளைவித்த, 1,200 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 6,599 ரூபாய், அதிகபட்சம், 8,599 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,599 ரூபாய், அதிகபட்சம், 7,099 ரூபாய், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 7,000 ரூபாய், அதிகபட்சம், 13 ஆயிரத்து, 900 ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், 13 வியாபாரிகள் கலந்து கொண்டு, 1, 200 மூட்டை மஞ்சளை, 70 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர்.

**தமிழகத்தில் குறைகிறது மழை; வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு : வானிலை ஆய்வு மையம் தகவல்**

**சென்னை**: "அரபிக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, கர்நாடகா நோக்கி சென்றதால், தமிழகத்தில், மழை குறையும்; நிலப்பகுதியில் இருந்து காற்று வீசுவதால், வெயில் அதிகரிக்கும்," என, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர், ரமணன் தெரிவித்தார்.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, வலுவடைந்து, இரு தினங்களுக்கு முன், குமரிக்கடல் பகுதியில் கரையைக் கடந்து, வட கேரளாவை ஒட்டிய அரபிக்கடலில் நிலை கொண்டிருந்தது. இது தற்போது, கர்நாடகாவை நோக்கி நகர்ந்துள்ளது. மாற்றங்கள் இதன் காரணமாக, தமிழக வானிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தென்படுகின்றன.

இதுகுறித்து, ரமணன் கூறியதாவது:

அரபிக்கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை, நேற்று காலை நிலவரப்படி, உள் கர்நாடகாவில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக, கடந்த, 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அனேக இடங்களில் மழை பெய்துள்ளது. தற்போது, உள் கர்நாடகாவில் உள்ள காற்றழுத்த தாழ்வு நிலையானது, வடகிழக்கு நோக்கி நகர்வதால், தமிழகத்தில் படிப்படியாக மழை குறையும். கர்நாடகா மற்றும் தெலுங்கானா பகுதிகளில் மழை அதிகரிக்கும். தமிழகத்தில், சில இடங்களில் மட்டும் மழையை எதிர்பார்க்கலாம். சென்னையை பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; நகரின் ஒரு சில இடங்களில், மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அனல் காற்றின் தாக்கம் இதுவரை, கடலில் இருந்து வீசிய காற்று, இனிமேல், தரைப்பகுதியில் இருந்து வீசும். குறிப்பாக தென்மேற்கு திசையில் இருந்து காற்று வீசுவதால், வெப்பநிலை அதிகரிக்கும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

மழையின் காரணமாக, தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பத்தின் அளவு குறைந்துள்ளது. சென்னையில் நேற்று மழை இல்லாத போதிலும், அனல் காற்றின் தாக்கம் இல்லை.

கன்னியாகுமரி, நெல்லை, துாத்துக்குடி, தர்மபுரி, திருச்சி, மதுரை உள்ளிட்ட வெப்பத்தின் தாக்கம் அதிகரித்திருந்த பகுதிகளில், நேற்று வெப்பநிலை கணிசமாக குறைந்திருந்தது.

இயல்பை காட்டிலும் அதிகம்!

தமிழகத்தில், ஒரு புறம் வெயில் சுட்டெரித்தாலும், கடல், நிலப்பகுதிகளில் ஏற்பட்ட காற்று மேலடுக்கு சுழற்சி, வெப்பச் சலனம் மற்றும் காற்றழுத்த தாழ்வு பகுதிகளின் காரணமாக, மார்ச் முதலே ஆங்காங்கு லேசானது முதல், மிதமான மழை பெய்து வருகிறது.

கடந்த சில தினங்களாக தான் அனேக பகுதிகளில், கனமழை பதிவாகியுள்ளது. ஒட்டுமொத்த தமிழகத்தை கணக்கிட்டால், மார்ச், கம் தேதி முதல், நேற்று வரை, இயல்பளவான, 8 செ.மீ., காட்டிலும், 35 சதவீதம் அதிகரித்து, 11 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.மாவட்ட அளவில், கடலூர், நாகை, நெல்லை, திருவாரூர் மாவட்டங்களில், இயல்பளவை விட, 100 சதவீதத்திற்கு மேல் மழை பதிவாகியுள்ளது. மேலும், விழுப்புரம், துாத்துக்குடி, தஞ்சை, சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, பெரம்பலுார், நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களில், இயல்பளவை விட, 50 சதவீதத்திற்கு மேல், மழை பெய்துள்ளது.சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் இயல்பளவை விட, மழை குறைவாகவே பதிவாகியுள்ளது.

## விருத்தாசலத்தில் எள் அறுவடை துவங்கியது



**விருத்தாசலம்**; விருத்தாசலத்தில் மழை ஓய்ந்ததால் நேற்று முதல் மீண்டும் எள் அறுவடை துவங்கியது.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், திட்டக்குடி, கம்மாபுரம், மங்கலம்பேட்டை, பரவளூர், தொரவளூர், குப்பநத்தம், புதுக்கூரைப்பேட்டை, கடலூர், பண்ருட்டி, அண்ணாகிராமம் உள்ளிட்ட பகுதிகளில் 3,750 ஏக்கரில் மாசிப் பட்டத்தில் இறவை

எள் விதைக்கபட்டது. திண்டிவனம் 1, திண்டிவனம் 2, திண்டிவனம் 3 உள்ளிட்ட உயர்ரக எள்ளை விவசாயிகள் சாகுபடி செய்தனர்.

கடந்த இரண்டு வாரங்களாக விருத்தாசலம் பகுதிகளில் எள் அறுவடை செய்யும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டனர். கடந்த ஐந்து தினங்களுக்கு முன் தொடர் மழை காரணமாக அறுவடை செய்யப்பட்ட எள் காய்கள் முளைத்தது. அறு வடைக்குத் தயாரான காய்களும் பாதித்ததால், விவசாயிகள் கவலைடைந்தனர். கடந்த இரு தினங்களாக மழை மழை ஓய்ந்து, வெயில் காய்ந்து வருவதால், மீண்டும் எள் அறுவடை செய்யும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடு பட்டுள்ளனர்.

## கள்ளக்குறிச்சி பகுதியில் தக்காளி விளைச்சல் அமோகம்

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டு நீர் பாசன முறையில் பயிர் செய்யபட்டுள்ள தக்காளி அதிகளவில் விளைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் அதிகளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. கடந்த சில நாட்கள் பெய்த மழை யால் தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளது. கள்ளக்குறிச்சி பகுதியில் அதிகளவு விவசாயிகள், சொட்டு நீர் பாசன முறையில் பணப்பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதன்படி கள்ளக்குறிச்சி அடுத்த கனியாமூர் பகுதியில் சாகுபடி செய்துள்ள தக்காளி அமோகமாக விளைச்சல் கண்டுள்ளது. சந்தையில் இதற்கு விலை குறைந்தாலும், சமீபத்தில் பெய்த மழையினால் செழிப்பாக விளைந்துள்ள தக்காளியை அறுவடை செய்வதில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மாவட்டத்தில் தொடரும் கோடை மழை : சிறு தானியம் பயிரிட விவசாயிகள் ஆர்வம்

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக கோடை மழை பெய்து வருவதால் விவசாயிகள், சிறு தானியங்களை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில், கடந்தாண்டு போதிய பருவ மழை இல்லாததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில்,

இந்தாண்டு கோடை மழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில், சித்திரை சாகுபடிக்காக, தங்களது விவசாய நிலங்களை உழுது, விவசாயிகள் தயார்படுத்தினர். ஆனால், மாவட்டத்தில், எதிர்பார்த்தபடி கோடை மழை பெய்யாமல் விவசாயிகளை ஏமாற்றி வந்தது. இதனால், பாசன வசதியுள்ள சில விவசாயிகள் மட்டும் கடந்த சில தினங்களாக சித்திரை பட்டத்தில் பயிர்களை நடவு செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த, சில தினங்களாக தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. மேலும், கோடை மழை தொடர வாய்ப்புள்ளதாலும், சித்திரை பட்டம் முடிய இன்னும், மூன்று தினங்களே உள்ளதால், சித்திரை பட்டத்தில், சிறு தானிய பயிர்களை நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில் உள்ள சிறுதானிய விதைகள் விற்பனை கடைகளில், சிறுதானிய விதைகளை விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், கடந்தாண்டு கோடை மழை ஓரளவுக்கு கை கொடுத்தது. ஆனால், தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்தபடி பெய்ய வில்லை. இந்தாண்டு, கோடை மழையும் விவசாயிகளை வஞ்சித்து வந்தது. இந்நிலையில், சித்திரை பட்ட இறுதி நாட்களில் கோடை மழை கடந்த சில தினங்களாக பெய்து வருகிறது. சித்திரை பட்டம் முடிய, மூன்று நாட்களே உள்ளதால், தர்மபுரி கடைவீதி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறுதானிய விதை கடைகளில் விதைகளை வாங்கி வந்து, விவசாயிகள் நிலத்தில் விதைத்து வருகின்றனர். இந்தாண்டு தென்மேற்கு பருவ மழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர்கள் கூறினார்கள்.

## சோலையாறு அணையின் நீர்மட்டம் உயர்வு; 7.85 அடியாக உயர்ந்தது

**வால்பாறை** : வால்பாறையில் பெய்த பரவலான மழையால், சோலையாறு அணையின் நீர்மட்டம் 7.85 அடியாக உயர்ந்துள்ளது.

கோவை மாவட்டம் வால்பாறையில், கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால், அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. வால்பாறை பி.ஏ.பி., அணைகளின் நீர்வரத்து சரிந்துள்ளதால், நேற்றுமுன்தினம் சோலையாறு அணையிலிருந்து பரம்பிக்குளம் அணைக்கு நீர்

திறப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். பரவலான மழையினால் 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு நீர்மட்டம் நேற்று காலை 7.85 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் இரண்டு அடி உயர்ந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 98 கன அடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு பரம்பிக்குளத்திற்கு 28 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.இதே போல் 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 15.30 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 48 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 275 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனிடையே சோலையாறு அணையிலிருந்து பைபாஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு தண்ணீர் திறப்பது நேற்று காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழை அளவு(மி.மீ.,)வால்பாறை---18, சோலையாறு_38,மேல்நீராறு_18, கீழ்நீராறு_24, பரம்பிக்குளம்-87.

## கோடை உழவு செய்ய விவசாயிக்கு அழைப்பு

**பெரம்பலூர்**: கோடை மழையை பயன்படுத்தி அனைத்து விவசாயிகளும் கோடை உழவு செய்து பயன்பெற வேண்டும், என விவசாயிகளுக்கு பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்டத்தில், அனைத்து வட்டாரங்களிலும் கோடை மழை பரவலாக பெய்துள்ளது. இம்மழையை பயன்படுத்தி அனைத்து விவசாயிகளும், கோடை உழவு செய்து பயன்பெற வேண்டும். கோடை உழவு செய்வதன் மூலம், மேல் மண் கீழ் மண்ணாகவும், கீழ் மண் மேல் மண்ணாகவும் மாற்றப்படும். அதனால், சாகுபடி செய்யப்படும் பயிர்கள் செழிப்பாக வளரும். கோடை உழவினால் பயிர்களை சேதப்படுத்தும் பூச்சிகளின் கூட்டுப்புழுக்கள் மண்ணில் மேலே வருவதால், அவற்றை பறவைகள் கொத்தி அழிப்பதன் மூலம் அடுத்த பருவத்தில் சாகுபடி செய்யப்படும். பயிர்களில், பூச்சிகளின் தாக்குதல் கணிசமாக குறைவதற்கு வாய்ப்பு உள்ளது.எனவே,விவசாயிகள் அனைவரும் கோடை உழவு செய்து மழை நீரை நன்கு மண்ணில் சேமித்து பயன் பெற வேண்டும். விவசாயிகள் தங்கள் கிணறுகளில் உள்ள நீரைக்கொண்டு குறுகிய கால வயதுடைய தோட்டக்கலைப்

பயிர்களான கீரை வகைகள், முள்ளங்கி போன்ற காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்து, அதிக வருவாய் பெற்று பயன்பெற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மொந்தன் வாழைக்கு திடீர் கிராக்கி வாழைத்தார் விலை கிடு கிடு

**கரூர்**: கரூர் மாவட்டத்தில், கடந்த ஆண்டு பருவ மழை தவறியதால், வாழை சாகுபடி குறைந்துள்ளது.

இதனால், வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. மொந்தன் வாழைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால், அதன் விலையும் உயர்ந்துள்ளது.

கரூர் மாவட்டம், புகளூர், செம்படாபாளையம், தோட்டக்குறிச்சி, தளவாபாளையம், பாலத்துறை உள்பட புகளூர் சுற்று வட்டார பகுதிகளில் பல்வேறு இடங்களில், 5,000 ஏக்கருக்கு மேல் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில், இரண்டு ஆண்டுகளாக தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவமழை குறைந்துள்ளது. கடந்த ஆண்டு, சராசரி அளவுக்கும் குறைவாகவே, கரூர் மாவட்டத்தில் மழை பெய்துள்ளது.

இதனால், வாழை சாகுபடி குறைந்துள்ளது. தற்போது, வரத்து குறைவால், வாழைத்தார்கள விலை உயர்ந்துள்ளது.

கடந்த வாரம், கரூர் மார்க்கெட்டில், ஒவ்வொரு வாழைத்தார் ரகத்திற்கும், 100 முதல், 150 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

பூவன், 500 ரூபாயில் இருந்து, 600 ரூபாய்க்கும், ரஸ்தாலி, 400 ரூபாயில் இருந்து, 500 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி, 450 ரூபாயில் இருந்து, 550 ரூபாய்க்கும், பச்சைநாடான், 500 ரூபாயில் இருந்து, 600 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம், மொந்தன் வாழைத்தார், 700 ரூபாய்க்கு விற்றது.

தற்போது, 800 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. "வைகாசி, ஆனி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட விஷேசங்கள், கரூர் மாரியம்மன் கோவில் திருவிழா உள்ளிட்ட காரணங்களால், வாழைத்தார் விலை உயர வாய்ப்பு உள்ளது' என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தென் மேற்கு பருவமழை குறிப்பிட்ட காலத்தில் துவங்குமா! கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பு

**கம்பம்** : தென் மேற்கு பருவமழை, குறிப்பிட்ட காலத்தில் துவங்கினால், முதல்போக நெல் சாகுபடியை சிக்கலின்றி துவக்கலாம் என கம்பம் பள்ளதாக்கு விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில், கூடலூர் முதல் பழநிசெட்டிபட்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில், இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. முதல் போகத்திற்கு, ஜூன் முதல் தேதியில், நாற்றுகள் வளர்க்க தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாகவே, ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறக்க முடிவதில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, முதல் போகத்திற்கு, ஜூன் 18 ல் தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளாக, முதல் போக விவசாயத்திற்கு ஜூ ன் முதல் தேதியில் தண்ணீர் திறக்கவில்லை. அணையின் நீர்மட்டம், 112 அடியாக இருந்தால், முதல் போகத்திற்கு தண்ணீர் திறக்க அனுமதி உள்ளது. ஆனால், கடந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு, 112 அடி நீர்மட்டத்தை பார்த்து, தண்ணீர் திறந்து அதிகாரிகள் சிக்கலில் சிக்கிக் கொண்டனர். எனவே, கடந்த ஆண்டு ஜூன் முதல் தேதி தண்ணீர் திறக்கவில்லை. தற்போது அணையின், நீர் மட்டம் 114 அடியாக உள்ளது. கடந்த வாரம், வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலையால், மழை கிடைத்து அணையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அணையில் நீர் மட்டம் 114.8 அடி உள்ளது. நீர்வரத்து 367 கனஅடியாகவும். அணையில் இருந்து 500 கனஅடி விடுவிக்கப்படுகிறது. அணையில் இருந்து விடுவிக்கப்படும் தண்ணீரின் அளவை குறைக்க, கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். காரணம் கடந்த இரண்டு ஆண்டுகளாக, முதல் போகம் கைவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டாவது, முதல் போகத்திற்கு, ஜூன் முதல் தேதி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக, இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் வாரத்தில் துவங்கினால், விவசாயத்திற்கு பாதிப்பிருக்காது. அணையில் நீர் இருப்பும், பருவமழையும் குறிப்பிட்ட காலத்தில் துவங்கி பெய்தால், முதல் போக சாகுபடி சிக்கலின்றி நடைபெறும். பருவ மழை ஏமாற்றினால், முதல் போக சாகுபடியில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கம்பம் பள்ளதாக்கு விவசாயிகள், பருவமழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## தக்காளி விலை உயர்வு

**தேனி** : தேனி மார்க்கெட்டில், கிலோ 5 ரூபாய்க்கு விற்ற தக்காளி, தொடர் மழை காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டு, கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேனி மற்றும் சுற்றுக்கிராமங்களில், தக்காளி விளைச்சல் அதிகமாக இருந்தது. வரத்து அதிகரிப்பு காரணமாக, தேனி மார்க்கெட்டில், தக்காளி விலை குறைந்து கிலோ 5 ரூபாய் வரை விற்கப் பட்டது.இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழை காரணமாக, தக்காளி விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்டது. செடியிலேயே, பழங்கள் அழுகி விட்டன. மீதம் உள்ள பழங்களிலும், பூச்சி விழுந்துள்ளது. இதனால் பழத்தின் வரத்து, மார்க்கெட்டிற்கு குறைந்தது. இதன் காரணமாக, விலை உயர்ந்து நேற்று கிலோ 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. அதேபோல் மலைக்காய்கறிகளும் பறிக்க முடியவில்லை. இதனால், கொடைக்கானல் மலையில் இருந்து ஒரு வாரமாக பீன்ஸ், டர்னிப், சவ்சவ், பட்டர்பீன்ஸ், சோயாபீன்ஸ், நூக்கல், கேரட் வரத்து இல்லாமல் போனது. இதனால் தேனி மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## தேங்காய் விலை விர்..

**ஆண்டிபட்டி**: தேவை அதிகரிப்பால், ஆண்டிபட்டி பகுதியில் தேங்காய் விலை உயர்ந்துள்ளது. ஆண்டிபட்டி பகுதிக்கு வருஷநாடு, மயிலாடும்பாறை, பாலக்கோம்பை, ராயவேலூர் உட்பட பல பகுதிகளில் இருந்தும், பெரியகுளம், போடி பகுதிகளில் இருந்தும் தேங்காய் வரத்து உள்ளது. கடந்த சில வாரங்களாக, தேங்காய் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கோடையில் இளநீர் தேவை அதிகரித்துள்ளது. இளநீருக்கு தரமான விலை கிடைப்பதால், முழு வளர்ச்சிக்கு முன்பே, இளநீராக விவசாயிகள் பறித்து விடுகின்றனர்.வீரபாண்டி கோயில் திருவிழா, கிராமங்களில் உள்ளூர் பொங்கல் விழா திருவிழாக்கள் நடந்து வருகிறது. இதனால், தேங்காய்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு, சில்லரை விலையில், மூன்று முதல் ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்ட தேங்காய் தற்போது, எட்டு ரூபாய் வரையும், எட்டு முதல் பத்து ரூபாய்க்கு விற்கப்பட்ட தேங்காய், 12 முதல் 15 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. விலை உயர்ந்து வருவதால், உணவு வகை தயாரிப்பில், தேங்காய் பயன்படுத்துவதை குறைத்து வருகின்றனர்.

**கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்**

**சேத்தூர்** : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம் மற்றும் தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி சார்பில், கணபதிசுந்தரநாட்சியார்புரம் கிராமத்தில், நவீன கரும்பு சாகுபடி குறித்த முகாம் நடந்தது. தரணி சர்க்கரை ஆலை துணை மேலாளர் ஷாகிர்உசேன் வரவேற்றார். அப்பகுதியில், நவீன கரும்பு சாகுபடி செய்யும் ராமலிங்கம் என்பவரது தோட்டத்திற்கு, விவசாயிகளை அழைத்து சென்று, கரும்பு சாகுபடியின் நிறை குறைகளை விளக்கினார். விவசாயிகளின் தொழில்நுட்பம் சம்பந்தமான சந்தேகங்களுக்கு, மதுரை வேளாண்மை கல்லூரி உழவியல்துறை பேராசிரியர் குருசாமி விளக்கமளித்தார். திருநெல்வேலி நபார்டு வங்கி துணை பொது மேலாளர் ராமலிங்கம், திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து பேசினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நீர்வரத்து அதிகரிப்பால் மேட்டூர் நீர்மட்டம் உயர்கிறது**



**மேட்டூர்**: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 33.73 அடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. அதேவேளையில், டெல்டா பகுதிகளில் மழை பெய்ததால் மேட்டூரில் இருந்து நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள் ளது. இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. அணைக்கு நேற்று

விநாடிக்கு 2299 கனஅடி தண்ணீர் வந்து கொண்டி ருந்தது. அதிக நீர்வரத்து காரணமாக நேற்று முன்தினம் 33.30 அடியாக இருந்த நீர்மட் டம் நேற்று காலை 33.73 அடியாக அதிகரித் தது. நீர் இருப்பு 9.09 டி.எம்.சி.

**வெல்லம் விலை உயர்வு**



**போச்சம்பள்ளி:** கோயில் விழாவையொட்டி மாவிளக்கு போடுவதற்கு தேவைப்படும் வெல்லம் விற்பனையும் சூடுபிடித்தது. இதனால், விலையும் உயர்ந்தது. கடந்த வாரம் ரூ.65க்கு விற்பனை செய்யப்பட்ட 2 கிலோ கொண்ட உருண்டை வெல்லம், போச்சம்பள்ளி வாரச்சந்தையில் ரூ.75 ஆக உயர்ந்தது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: போச்சம்பள்ளி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கோயில் விழாக்கள் நடந்து வருகிறது. இதில், பக்தர்கள் மாவிளக்கு எடுத்து வேண்டுதல் நிறைவேற்றுவர். இந்த மாவிளக்கில் இனிப்பு சுவைக்காக வெல்லத்தை சேர்ப்பது வழக்கம். இதனால், போச்சம்பள்ளி சந்தையில் ஒரேநாளில் 5 டன் வரையிலும் வெல்லம் விற்பனையாகி உள்ளது. இதன் மூலம் ஸி1 லட்சத்து 87 ஆயிரத்து 500 வரை வர்த்தகம் நடந்துள்ளது. வழக்கமாக வாரச்சந்தையில் 2 முதல் 3 டன் வரை வெல்லம் விற்பனை செய்யப்படும். தீபாவளி மற்றும் பொங்கல் போன்ற பண்டிகை தினங்களில் 10 டன் முதல் 12 டன் வரையிலும் விற்பனை இருக்கும் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழ்நாட்டில் இன்று சில இடங்களில் மழைபெய்யும்: வானிலை மையம் அறிவிப்பு</u>**




**சென்னை,**

தமிழ்நாட்டில் இந்த வருடம் முன்கூட்டியே கோடை வெயிலின் தாக்கம் தொடங்கியது. தமிழ்நாட்டில் பல நகரங்களில் 100 டிகிரிக்கு மேல் பதிவாகியிருந்தது. இந்த நிலையில் 4 நாட்கள் தென்மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. அதன்காரணமாக, வெப்பம் குறைந்து, எங்கு பார்த்தாலும் மழைநீராக காட்சியளித்தது.

இந்த நிலையில், கடந்த 2 நாட்களாக தமிழ்நாட்டில் வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. ஒரு சில இடங்களில் மட்டுமே மழை பெய்துள்ளது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மைய அதிகாரி கூறியதாவது:–

தமிழ்நாடு, புதுச்சேரியில் இன்று (திங்கட்கிழமை) ஆங்காங்கே சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நேற்று காலை 8.30 மணியுடன்

முடிவடைந்த 24 மணி நேரத்தில், சேலம் மாவட்டம் ஆத்தூர், வாழப்பாடி ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ. மழையும், வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், குடியாத்தம் ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ. மழையும், தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

## <u>இந்தியாவில், 2.48 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் அமெரிக்க அமைப்பு மதிப்பீடு</u>



**புதுடெல்லி,**

இந்தியாவில், நடப்பு 2013–14 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) 2.48 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. கடந்த 2012–13 பருவத்தில் 2.51 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

ஆக, இந்த பருவத்தில் சர்க்கரை உற்பத்தி சற்றே குறையும் என தெரிகிறது. எனினும் அமெரிக்க அமைப்பின் கணிப்பு இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின் மதிப்பீட்டை விட (2.38 கோடி டன்) அதிகமாக உள்ளது. முதலில் இச்சங்கம் 2.50 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என தெரிவித்திருந்தது. இச்சங்கம்

வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி தற்போதைய பருவத்தில் ஏப்ரல் 15–ந் தேதி வரையிலான காலத்தில் 2.32 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகியுள்ளது.

நம் நாட்டில் மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் சர்க்கரை உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. நடப்பு பருவத்தில் இந்த மாநிலங்களின் சர்க்கரை உற்பத்தி முறையே 77.30 லட்சம் டன் மற்றும் 67.80 லட்சம் டன்னாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது. கடந்த பருவத்தில் மகாராஷ்டிரா 80 லட்சம் டன்னும், உத்தரபிரதேசம் 75 லட்சம் டன்னும் உற்பத்தி செய்திருந்தன.

தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்களிலும் சர்க்கரை உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்கு மாநிலங்களில் உற்பத்தி குறையும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், கர்நாடகாவில் மட்டும் சர்க்கரை உற்பத்தி 34 லட்சம் டன்னிலிருந்து 42 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

## கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.50 லட்சத்துக்கு பருத்தி ஏலம்



**இடைப்பாடி,**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் நேற்று முன்தினமும், நேற்றும் பருத்தி ஏலம் நடைபெற்றது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய

பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து ஏலத்தில் கலந்து கொண்டார்கள். 2 ஆயிரத்து 500 பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. மொத்தம் ரூ.50 லட்சத்திற்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் பி.டி. ரக பருத்தி மூட்டைகள் ரூ.4800 முதல் ரூ.5800–க்கும், டி.சி.எச்.ரக பருத்தி மூட்டைகள் ரூ.5600 முதல் ரூ.6800–க்கும் ஏலம் போனது. இதில் வெளியூர் வியாபாரிகள் பலரும் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். எள் 60 மூட்டைகள் ரூ.6 லட்சத்திற்கு ஏலம் போனது.

## 2 மாதங்களுக்கு விலை உயர வாய்ப்பில்லை: அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்பது நல்லது



கிழங்கு வகை பயிர்களில் முதன்மை பயிராக, உலக அளவில் 150 நாடுகளில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு வருகிறது. 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் உருளைக்கிழங்கை உணவாக உட்கொண்டு வருகிறார்கள். இந்தியாவில் கடந்த 2012–13–ம் ஆண்டு 19.65 லட்சம் எக்டேரில், 447 லட்சம் டன்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது.

உருளைக்கிழங்கு சாகுபடி

இந்தியாவில் உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களில் 85 சதவீத பரப்பளவில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு, 89 சதவீதம் உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையத்தின் கணக்கீட்டின்படி, கடந்த 2012–13–ம் ஆண்டு, தமிழ்நாட்டில் 4,860 எக்டேர் நிலப்பரப்பில், 97,100 டன்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டு

உள்ளது. தமிழகத்தில் கடந்த ஆண்டை காட்டிலும், உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பளவில் 1 சதவீதமும், உற்பத்தியில் 7 சதவீதமும் குறைந்துள்ளது. நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களின் மலைப்பிரதேசங்களில், உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு உள்ளது. பிப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் குறைந்த அளவே வரத்து உள்ளது.

நல்ல விலை கிடைக்கிறது

இதனால் தமிழக விவசாயிகள் தங்களுக்கு தேவையான உருளைக்கிழங்கை உத்தரபிரதேசத்தில் உள்ள ஆக்ரா, ஹசாந்பூர், மத்தியபிரதேசத்தில் உள்ள இந்தூர், கர்நாடகாவில் உள்ள கோலார் ஆகிய சந்தைகளில் இருந்து கொள்முதல் செய்து வருகிறார்கள். அதிக உற்பத்தி செலவு, தண்ணீர் பற்றாக்குறை, வேலை ஆட்கள் பற்றாக்குறை மற்றும் வெளி மாநிலங்களின் வரத்தால் விலை வீழ்ச்சி ஆகிய காரணங்களால், விவசாயிகள், மலைப்பிரதேச காய்கறி சாகுபடிக்கு மாறி வருகிறார்கள்.

நீலகிரி உருளைக்கிழங்கு சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், வேலூர் ஆகிய இடங்களுக்கும், வெளி மாநிலங்களில் உள்ள சந்தைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு, உயர்ந்த தரம் கொண்டது என்பதால், மற்ற மாநில உருளைக்கிழங்கை விட, இதற்கு நல்ல விலை கிடைக்கிறது.

விலை உயர வாய்ப்பு இல்லை

நீலகிரி விவசாயிகள், பிப்ரவரி மாதத்தில் நீர்போகத்தில் விதைத்த உருளைக்கிழங்குக்கு, அறுவடை சமயமான மே மற்றும் ஜூன் மாதங்களில் என்ன விலை கிடைக்கும்? என்று அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர். இதற்காக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில், கடந்த 23 ஆண்டுகளாக நிலவிய உருளைக்கிழங்கு விலை நிலவரங்களை ஆய்வு செய்தது. இதன்படி, நல்ல தரமான நீர்போக உருளைக்கிழங்குக்கு அறுவடை சமயத்தில் கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.25 வரை கிடைக்கும் என்று தெரியவந்து உள்ளது. வருகிற 2 மாதங்களுக்கு விலை உயர வாய்ப்பு இல்லை என்பதால்,

விவசாயிகள் அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனே விற்பது நல்லது. பொதுமக்கள், மஞ்சள் நிற தோலுடன், கடினத்தன்மையுடன் இருக்கும் நீலகிரி உருளைக்கிழங்கை கண்டறிந்து வாங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**–தகவல்: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை.**

**விருத்தாசலம் பகுதியில் நெற்பயிர் நடவு பணியில் விவசாயிகள் தீவிரம்**



விருத்தாசலம் பகுதியில் குறுவை நெற்பயிர் நடவு பணியில் விவசாயிகள் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கோடை மழை

விருத்தாசலம் பகுதியில் உள்ள விவசாயிகள் அனைவரும் ஆண்டுதோறும் மே மாதத்தில் குறுவை நெற்பயிர் சாகுபடி செய்வது வழக்கம். அதன்படி நடப்பாண்டில் விருத்தாசலம் மற்றும் அதனை சுற்றியுள்ள கம்மாபுரம், பெண்ணாடம், மங்கலம்பேட்டை, சிறுபாக்கம், வேப்பூர் உள்பட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் குறுவை நெற்பயிர் நடும் பணியில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபத்தில் பெய்த கோடை மழையினால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் இப்பணியில் மும்முரமாக உள்ளனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறும் போது,

கடந்த 3 வருடங்களாக விருத்தாசலம் பகுதியில் பருவ மழையானது போதிய அளவு பெய்யவில்லை. இதன் காரணமாக இங்கு நிலத்தடி நீர் மட்டமானது பெருமளவு குறைந்து வந்ததால், நடப்பாண்டில் குறுவை நெற்பயிரினை நடவு செய்ய என்னை போன்று பல விவசாயிகள் தயங்கி வந்தனர்.

நீர்மட்டம்

இந்நிலையில் முன்பு எப்போதும் இல்லாத வகையில் கோடை மழையானது விருத்தாசலம் மற்றும் சுற்றுபுற கிராமங்களில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஓரளவுக்கு பெய்தது. இதன் காரணமாக நீர் மட்டம் சிறிது உயர்ந்துள்ளது. இதனால் விருத்தாசலம் பகுதியில் விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் நெற்பயிரினை நடவு செய்து வருகின்றனர். எனினும் கோடை மழையானது மேலும் 2 நாட்கள் நீடித்து இருந்தால் ஏரி, குளங்கள் ஓரளவுக்கு நிரம்பி இருக்கும். இதன் மூலம் கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் குறுவை நெற்பயிர் சாகுபடி செய்யும் பணி மேலும் அதிகரித்து இருக்கும். என்றார்.

## மீன்பிடி தடைகாலம் எதிரொலி படகுகளை சீரமைக்கும் பணியில் மீனவர்கள் தீவிரம்



**கடலூர் முதுநகர்,**

கடலூர் துறைமுகத்தில் மீன்பிடி தடைகாலம் அமலில் உள்ளதால் மீனவர்கள் படகுகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## மீனவர்கள்

கடலூர் துறைமுகத்தில் இருந்து நாள்தோறும் சோனங்குப்பம், அக்கரைகோரி, சிங்கார தோப்பு, தேவனாம்பட்டினம் உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த 1000க்கும் அதிகமான மீனவர்கள், 100க்கும் மேற்பட்ட விசை மற்றும் பைபர் படகுகளில் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித்து வருவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் மீன்களின் இனப்பெருக்கத்திற்காக ஏப்ரல் 15ந் தேதி முதல் மே 29ந் தேதி வரை மீன் பிடி தடைகாலம் அமலில் உள்ளது. இந்த ஆண்டும் மீன்பிடி தடைகாலம் அமலில் உள்ளதால் கட்டுமரம், பைபர் படகு மீனவர்கள் தவிர விசை படகு மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடித்து வருகின்றனர்.

## சீரமைக்கும் பணி

இந்த மீன்பிடி தடைகாலத்தை பயன்படுத்தி மீனவர்கள் தங்களின் மீன்பிடி வலைகள் மற்றும் படகுகளை சீரமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபற்றி மீனவர் ஒருவர் கூறுகையில் 45 நாட்கள் மீன்பிடி தடைகாலத்தில் எங்களது படகுகளை ஆண்டுக்கு ஒருமுறை சீரமைக்க நல்ல வாய்ப்பாக கருதுகிறோம். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி படகுகளில் உள்ள பலகைகளை மாற்றி அமைப்பது, என்ஜின்களை முறையாக கழற்றி நல்ல விதத்தில் பழுது நீக்கி மீண்டும் அதனை படகில் பொருத்துவது, மீன்பிடி வலைகளை பழுது பார்ப்பது, படகுகளுக்கு புதிய வர்ணம் பூசுவது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இதில் ஆசாரி, மோட்டார் மெக்கானிக், பெயிண்டர் என 5 முதல் 10நபர்கள் வரையில் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இப்பணிகள் முடிவடைய குறைந்த பட்சம் 15 நாட்கள் முதல் 20 நாட்கள் வரை தேவைப்படுகிறது. இதற்கு சுமார் 2 முதல் 3 லட்சம் ரூபாய் வரை செலவு ஆகிறது என அவர் கூறினார்.

மீன்பிடி தடைகாலம் என்பதால் கடலூர் துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டாலும், மீனவர்கள் எப்பொழுதும் போல் சுறுசுறுப்புடன் இயங்குவதை காணமுடிகிறது.

**விழுப்புரம் பகுதிகளில் எள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**



**விழுப்புரம்,**

விழுப்புரம் பகுதிகளில் எள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எள் சாகுபடி

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 வருடங்களாக விவசாயத்திற்கு தேவையான அளவு மழை பெய்யாததால் விவசாயிகள் பலர் தங்களது நிலத்தை தரிசு நிலமாக வைத்துள்ளனர். இந்நிலையில் தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

விழுப்புரத்தை அடுத்த கோனூர், தெளி, சிறுவாக்கூர், கருங்காலிபட்டு, கொத்த மங்கலம், கப்பூர் ஆகிய பகுதிகளில் கிணற்று நீர் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் அதிகளவில் எள் பயிரிட்டுள்ளனர். 90 நாள் பயிரான எள்ளுக்கு, குறைந்த அளவு தண்ணீரே போதுமானதால் விவ சாயிகள் அதிகளவில் எள் பயிரிட்டுள்ளனர்.

இதுகுறித்து கோனூர் கிராமத்தில் எள் பயிரிட்டுள்ள விவசாயி ஒருவர் கூறியதாவது:–

மழை பொய்த்து போன காரணத்தினால், சிறிதள வுள்ள கிணற்று தண்ணீரை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறேன். இதனால், தண்ணீர் குறைந்த அளவு

தேவைப்படும் பயிரும், வறட்சியை தாங்கக்கூடிய பயிருமான எள் பயிரிட்டுள்ளேன். இதற்கு களை எடுக்கவும் குறைந்த செலவே ஆகின்றது.

தற்போது கிணற்று தண்ணீரும் வெகுவாக வற்றி விட்டது. எனவே அரசு நடவடிக்கை எடுத்து மானிய விலையில் ஆழ்துளை கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 2-ம் கட்ட பேச்சு: மீனவர்கள், அதிகாரிகள் கொழும்பு புறப்பட்டனர்

இலங்கை மற்றும் தமிழக மீனவர் கள் பங்கேற்கும் 2-ம் கட்ட பேச்சு வார்த்தை கொழும்பில் இன்று நடக் கிறது. இதற்காக தமிழக, புதுவை மீனவர்கள் மற்றும் மத்திய, மாநில அரசு அதிகாரிகள் குழு இலங்கை புறப்பட்டுச் சென்றது.

பாக் ஜலசந்தி பகுதியில் மீன்பிடிப்பது தொடர்பாக இந்திய, இலங்கை மீனவர்களிடையே நீண்டகாலமாக பிரச்சினை இருந்து வருகிறது. தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடிக்கடி தாக்குவதும், பிடித்துச் சென்று சிறையிலடைப்பதும் தொடர்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இருநாட்டு மீனவர்களிடையே கடந்த ஜனவரி 27-ம் தேதி சென்னையில் முதல் கட்ட பேச்சுவார்த்தை நடந்தது.

இதில், இருநாட்டு மீனவர்களும் இடையூறின்றி தொழிலை செய் வது, இரட்டை மடி வலைகளை இருதரப்பிலும் பயன்படுத்தாமல் இருப்பது போன்ற சில முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர். 2-ம் கட்ட பேச்சுவார்த்தையை இலங்கையில் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஏற்கெனவே இரு முறை தேதி குறிப்பிடப்பட்டு, தள்ளிப்போனது. இந்நிலையில், இலங்கை தலைநகர்

கொழும்பில் இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தை இன்று (திங்கள்கிழமை) நடக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

பேச்சுவார்த்தையில் பங்கேற் பதற்காக நாகை மாவட்டத்தைச் சேர்ந்த கே.சிவஞானம், ஜி.வீர முத்து, தஞ்சை மாவட்டம் பி.ராஜ மாணிக்கம், புதுக்கோட்டை மாவட் டம் குட்டியாண்டி, ராமநாதபுரம் மாவட்டம் ஜி.ஜேசுராஜா, காரைக் கால் எம்.இளங்கோ உள்ளிட்ட 19 மீனவர் பிரதிநிதிகள் மற்றும் தமிழக அரசின் மீன்வளத்துறை செயலாளர் ச.விஜயகுமார், இயக்குநர் ச.முனியநாதன், கூடுதல் இயக்குநர் ரெங்கராஜு மற்றும் மத்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் சுசித்ரா துரை, துணைச் செயலாளர் மயாங் ஜோஷி உள்ளிட்டோர் ஞாயிற்றுக்கிழமை இரவு விமானம் மூலம் இலங்கை புறப்பட்டுச் சென்றனர்.

இன்று நடக்கும் பேச்சு வார்த்தையில் இலங்கை மீன்வளத் துறை தலைமை இயக்குநர் நிமல் ஹெட்டியராச்சி, மீன்வளத்துறை இயக்குநர் எஸ்.சுபசிங்கே உள்ளிட்ட அதிகாரிகளும் அந்நாட்டு மீனவ பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.